பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 07 2026 SUNDAY     12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கார்கில் வெற்றி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த ராணுவ வீரர்களை நினைவுகூர்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கார்கில் வெற்றி தினத்தை ஒட்டி, குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர் உள்ளிட்ட தலைவர்கள் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த ராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

3. தைவான் நாட்டு வான்வழியில் சீன போர் விமானங்கள், அத்துமீறி நுழைந்ததாக தைவான் பாதுகாப்பு அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.

4. உலக மகளிர் ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் அனாகத் சிங்கிற்கு மத்திய அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

5. அமெரிக்க சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

கார்கில் வெற்றி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, ராணுவ வீரர்களின் தீர செயல்களை நினைவுகூர்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், நாட்டின் பாதுகாப்பிற்காக ராணுவத்தினர் ஆற்றி வரும் பணிகள் அளப்பரியது என்று தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் மோடி (1) கார்கில் 41 செகண்ட்ஸ்)

கார்கில் வெற்றி தினத்தை ஒட்டி, இந்த ஆண்டு தில்லியின் தேசிய போர் நினைவிடத்திலிருந்து Shourya Vijay Yathra நடத்தப்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

(சவுண்ட் பைட் மோடி (2) யாத்ரா 33 செகண்ட்ஸ்)

*தனியார் துறை மூலம் வடிவமைக்கப்பட்ட விக்ரம்-1 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் மோடி (3) விக்ரம்-1 24 செகண்ட்ஸ்)*

*தேநீர் என்பது ஒரு பானம் மட்டுமல்ல, நமது வாழ்வியலோடு இணைந்தது என்று பிரதமர் கூறினார்.*

*(சவுண்ட் பைட் மோடி (4) தேநீர் 37 செகண்ட்ஸ்)*

*அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கம், நாடுமுழுவதும் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் மோடி (5) மரம் நடும் 35 செகண்ட்ஸ்)*

*விநாயகர் சதுர்த்தியின் போது, மண்ணால் செய்யப்பட்ட பிள்ளையார் சிலைகளை பயன்படுத்துமாறு பிரதமர் கூறினார்.*

*(சவுண்ட் பைட் மோடி (6) பிள்ளையார் 20 செகண்ட்ஸ்)*

*உள்ளூர் பொருட்களுக்கு ஆதவளிக்கும் வகையில், கைத்தறி ஜவுளிப் பொருட்களை வாங்கி, நெசவாளர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.*

*(சவுண்ட் பைட் மோடி (7) உள்ளூர் ஜவுளி 46 செகண்ட்ஸ்)*

*முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் நினைவு தினம், நாளை அனுசரிக்கப்படுவதை ஒட்டி, அவரது தன்னலமற்ற சேவையை நினைவுகூருவதாக பிரதமர் தெரிவித்தார்.*

(சவுண்ட் பைட் மோடி (8) கலாம் 50 செகண்ட்ஸ்)

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

>>>>><<<<<

கார்கில் வெற்றி தினத்தை ஒட்டி, குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள், நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த  ராணுவ வீரர்களுக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ராணுவ வீரர்களின் தைரியம், இந்திய ராணுவத்தின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுவதாக தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதிவில், ராணுவப்படையினரின் தன்னலமற்ற தியாகத்தின் மூலம் கார்கில் போரில் வெற்றிபெற்றதாக குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டின் பாதுகாப்பிற்காக பணியாற்றி வரும் ராணுவ வீரர்களின் அர்ப்பணிப்பை நாடு வணங்குவதாக கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், கார்கில் Drass-ல் அமைந்துள்ள போர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள பதிவில், ராணுவத்தினரின் அர்ப்பணிப்பையும், தைரியத்தையும் நினைவுகூர்வதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய கல்வி அமைச்சராக திரு. பிரல்ஹாத் ஜோஷி இன்று கூடுதலாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இப்பதவியை வகித்த திரு. தர்மேந்திர பிரதான் நேற்று ராஜினாமா செய்ததை அடுத்து, திரு. பிரல்ஹாத் ஜோஷிக்கு கூடுதலாக இந்த பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தைவான் நாட்டு வான்வழியில் சீன விமானப்படை போர் விமானங்கள், அத்துமீறி நுழைந்ததாக தைவான் பாதுகாப்பு அமைச்சகம் குற்றம் சாட்டியுள்ளது.

அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சீனாவின் 4 போர் விமானங்களும், 7 போர்க் கப்பல்களும் தைவான் பகுதியில் அத்துமீறி நுழைந்ததாக கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, தைவான் வான் எல்லையில், சீனாவின் 29 போர் விமானங்களும், 6 போர்க் கப்பல்களும் நேற்று நுழைந்ததாக கூறியிருந்தது.

தைவான் நாடு, சீனாவின் ஒரு பகுதி என்று சீனா கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

உலக மகளிர் ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் அனாகத் சிங்கிற்கு மத்திய அமைச்சர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி, நாட்டு மக்களுக்கு பெருமை சேர்ப்பதாக கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் வெளியிட்டுள்ள பதிவில், ஒவ்வொரு இளைஞருக்கும், பெண்களுக்கும் இந்த வெற்றி ஊக்கமளிப்பதாக தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அனாகத் சிங் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதாக கூறியுள்ளார்.

>>>>><<<<<

அமெரிக்க சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-2 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் *Ekaterina Ovcharenko*-வை வென்றார்.

>>>>><<<<<